


34ஆவது ஆண்டில்
Tel: 416-282-8059
# விளம்பரம்
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
email: vlambaram@sympatico.ca www.vlambaram.com




நதி: 34 பாலம்: 17 சமூக முன்னேற்றப்பத்திரிகை மாதமிருமுறை இலவசம் SEPTEMBER 01, 2024

# பிராந்திய யுத்தத்தின் விளிம்பில் மத்திய கிழக்கு!

தெஹ்ரானில் (Tehran) ஹமாஸின் அரசியல் தலைவர் இஸ்மாயில் ஹனியேயாக் (Ismail Haniyeh) மற்றும் பெய்ரூட்டில் (Beirut) ஹெஸ்பொல்லா தலைவர் ஃபுவாட் ஷுக்கர் (Fuad Shukr) படுகொலை செய்யப்பட்டமை இஸ்ரேல் மீது ஈரான் பதிலடி தாக்குதல் கொடுக்கக் கூடும் எனவும் இது ஒரு முழுமையான பிராந்தியப் போரைத் தூண்டும் எனவும் அச்சத்தை எழுப்பியுள்ளது. 2023 ஒக்ரோபர் 7இல் நடைபெற்ற இஸ்ரேல் மீதான ஹமாஸின் தாக்குதலுக்குப் பின்னர் ஈரானிய சார்பு வலையமைப்பில் குறைந்தபட்சம் 39 மூத்த உறுப்பினர்களை இஸ்ரேல் அழித்துள்ளது. இதையடுத்து ஈரான், "ஆக்கிரமிப்பாளர்களைத் தண்டிப்பதன் மூலமும், சியோனிச ஆட்சியின் (Zionist Regime) சாகசத்திற்கு எதிராகத் தடுப்பை உருவாக்குவதன் மூலமும் மத்திய கிழக்கு பிராந்தியத்தில் ஒரு நிலையான தன்மையைக் கொண்டுவர முடியும்" என்று அறிவித்திருந்தது.

இஸ்ரேலுக்கு எதிராக ஹமாஸ் (Hamas), ஹெஸ்பொல்லா (Hezbollah) மற்றும் யெமனின் ஹூதிகள் (Yemen's Houthis) ஆகிய மூன்று இயக்கங்களையும் ஈரான் நீண்டகாலமாக ஆதரித்து வருகிறது.

ஈரானின் சாத்தியமான தாக்குதலுக்குப் பதிலடி கொடுக்க இஸ்ரேல் தயாராகி வரும் அதேவேளையில் ரஃபா (Rafah) எல்லையில் ஆள் இல்லாத விமானங்களின் தாக்குதல்மூலம் 100 இற்கு மேற்பட்ட ஹமாஸ் தலைவர்களைக் குறிவைத்தும் இஸ்ரேல் தனது போரைத் தொடர்ந்து வருகிறது.

இஸ்ரேல் மீதான ஈரானின் உறுதியான விரோத நிலைப்பாட்டாலும், ஈரானில் நடைபெறுகின்ற அணுசக்தி ஆய்வுகளாலும், இஸ்ரேலிற்கு எதிரான குழுக்களுக்கான ஈரானிய ஆதரவாலும் ஈரானை ஒரு குறிப்பிடத்தக்க அச்சுறுத்தலாகவே (Significant threat) இஸ்ரேல் கருதி தனது நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.



Prime Minister Benjamin Netanyahu and Hezbollah leader Hassan Nasrallah

இஸ்ரேலுக்கு ஆதரவாக பிரிட்டன் மற்றும் பிரான்ஸ் உடன் இணைந்து அமெரிக்கா தனது பாதுகாப்பு நிலைப்பாட்டை மத்திய கிழக்கு பிராந்தியத்தில் உயர்த்தியுள்ளது. இஸ்ரேலைத் தாக்கினால் ஈரான் பேரழிவுகளை சந்திக்க நேரிடும் என அமெரிக்கா 2024 ஒகஸ்ற் 23இல் எச்சரிக்கை விடுத்துள்ளது. அத்துடன் இவ்வாறான ஒரு சம்பவம் தற்போது நடைபெற்று வரும் காசா போர் நிறுத்தம் தொடர்பான பேச்சுவார்த்தைகளையும் பாரதூரமாகப் பாதிக்கும் எனவும் அமெரிக்கா தெரிவித்துள்ளது. இஸ்ரேலுக்கான அமெரிக்க அரசின் அசைக்க முடியாத ஆதரவும், இஸ்ரேலுக்கு ஆதரவாக கடற்படை வளங்களை அமெரிக்கா மத்திய கிழக்குப் பிராந்தியத்தில் வைத்திருப்பதும், இஸ்ரேலிய அரசிற்கு அமெரிக்க அரசு வழங்கும் இராஜதந்திர ஆதரவும், ஈரானிற்கு அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் ஆகிய இரண்டு நாடுகள் மீதும் விரோதத்தை ஆழமாக்கியுள்ளது. மத்திய கிழக்குப் பிரதேசத்தில் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் பிரதிநிதியாக இஸ்ரேலை ஈரான் கருதுகிறது. இக்கருத்து ஈரானின் இஸ்ரேலிய விரோத கொள்கைகள் மற்றும் நடவடிக்கைகளுக்கு ஊக்கமளிக்கிறது. மேலதிகமாக அமெரிக்கா ஈரானை 'தீமையின் அச்சு' (Axis of evil) என முத்திரை குத்தியதும், ஈரான் மீது கடுமையான பொருளாதாரத் தடைகளை சுமத்தியதும் ஈரானின் விரோதத்தை வலுப்படுத்தியுள்ளது.

ஈரானிற்கும் இஸ்ரேலிற்கும் இடையே ஒரு போர் உருவானால் அதன் விளைவுகள் மத்திய கிழக்குப் பிரதேசத்தை மட்டுமல்லாமல் முழு உலகத்தையும் பாரதூரமாகப் பாதிக்கும் சாத்தியக் கூறுகள் உண்டு. அதனால் ஏற்படும் பேரழிவுகள் மற்றும் உயிரழிவுகளைத் தவிர அதன் தாக்கம் உலகம் முழுவதும் உணரப்படும். ஈரான் இஸ்ரேலுக்கு இடையேயான பதட்ட நிலை ஈரானின் அணுசக்தி ஆய்வுகளை விரைவுபடுத்தும் அத்துடன் இஸ்ரேலின் இராணுவத் தயார் நிலையையும் வலுப்படுத்தும். இதனால் ஒரு முழுஅளவிலான போர் மூளும்போது அதன் விளைவுகள் முழு மத்திய கிழக்குப் பிரதேசமும் பரவி அப்பிராந்தியத்தை விரைவில் சீர்குலைக்கும்.

தற்போது மத்திய கிழக்கே உலகளாவிய முக்கிய எண்ணெய் வழங்கும் பிரதேசமாக இருக்கிறது. இவ்வாறான போர், எண்ணெய் இறக்குமதியை நம்பியிருக்கும் பொருளாதாரங்களுக்குப் பெரும் விலை உயர்வை ஏற்படுத்தி பொருளாதார அழிவை ஏற்படுத்தும். அத்துடன் உலக எண்ணெய் விநியோகத்திற்குரிய நீர்வழிப் பாதைகள் தடைப்படுவதன்மூலம் உலகளாவிய பொருளாதார பேரழிவு ஏற்படலாம்.

மேற்கூறியவாறு First Post ஊடகத்தில் கட்டுரை வெளியிட்டிருந்த இந்திய முன்னாள் இராணுவத் தளபதியான Lt.Gen.AB Shivane மேலும் தனது

தொடர்ச்சி 05ஆம் பக்கம்


















உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி,
மகளிர் கல்லூரி பழைய
மாணவர்கள் பெருமையுடன்
வழங்கும்

முற்றிலும்
புதுமையான நிகழ்வுகளுடன்,
நீண்ட இடைவெளிக்குப் பின் மீண்டும்

# வானவில் 2024

## இயல்–இசை–நாடகம்

### கோடை காலத்தின் குளிர் தென்றல்

SEPTEMBER 28 SATURDAY 6:00 PM

இரண்டு நாட்கள்

SEPTEMBER 29 SUNDAY 6:00 PM

**Armenian Youth Centre**
50 Hallcrown Pl. North York, M2J 1P6

## பேச்சுப் போட்டி

Saturday, August 24, 2024 at 9:00AM

**Talenta Academy**
2020 Ellesmere Road, Unit #2, Toronto, ON M1H 2Z8

முதலிடம் பெறுபவருக்கு தங்கப் பதக்கம் பரிசாக வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு:
647-760-6689, 416-697-1317,
647-969-1154, 416-918-2464



Available Till Midnight
Including Weekends & Holidays

ANTON
DHARMASEELAN
MORTGAE AGENT

#1 Mortgage Agent in GTA
#2 in Canada

CALL ME FIRST
FOR ALL YOUR MORTGAGE NEEDS

PURCHASE
REFINANCE
SELF EMPLOYED
BAD CREDIT
INVESTMENT PROPERTY
RENEWAL

MAJOR BANKS
ALTERNATIVE LENDERS
B LENDERS
CREDIT UNIONS
TRUST COMPANIES
PRIVATE LENDERS

416 704 1200

anton@myhomemls.ca

MORTGAGE ALLIANCE
Broker # 10530
#200, 2005 Sheppard Ave. E.
Toronto, ON M2J 5B4

FAX: 1 866 566 3068

# இரண்டாம் சுற்று ஆபத்து

## – அரவின் –

இலங்கையில் ஜனாதிபதித் தேர்தலுக்கு இன்னமும் மூன்று வாரங்களே இருக்கின்ற நிலையில், பிரதான வேட்பாளர்கள் தங்களின் தேர்தல் விஞ்ஞாபனங்களை வெளியிட்டுள்ளனர்.

தேசிய மக்கள் கட்சியின் வேட்பாளர் அனுரகுமார திசநாயக்க 233 பக்கங்களில் தேர்தல் அறிக்கையை வெளியிட்டிருந்தார். ஆனாலும் அதில் தமிழர் பிரச்சினை அல்லது தேசிய இனப்பிரச்சினைபற்றி ஒரு வார்த்தைகூட இல்லை. தமிழ் மக்களின் பிரச்சினையைத் தீர்த்து வைப்பதற்கான எந்தவொரு திட்டமோ யோசனையோ அதில் முன்வைக்கப்படவில்லை.

அனைத்து மக்களையும் சமமாக நடத்தக் கூடிய அரசியலமைப்பை உருவாக்குவது பற்றியே அவர் வாக்குறுதியை வழங்கியிருக்கிறார்.

கடந்த காலங்களில் இவ்வாறான வாக்குறுதியை வழங்கிய எந்த ஜனாதிபதியும் அதனை நிறைவேற்றவில்லை. அனுரகுமார திசநாயக்க ஜனாதிபதியாகப் பதவியேற்றால்கூட, அதனை செய்யக் கூடிய நிலை ஏற்படாது.

ரணில் விக்கிரமசிங்கவின் தேர்தல் விஞ்ஞாபனத்திலும்கூட தமிழ் அரசுக் கட்சி விரும்பியபடி, சமஷ்டி தீர்வை உள்ளடக்கிய எந்த விடயமும் இல்லை.

சஜித் பிரேமதாசவின் தேர்தல் அறிக்கையிலும் புதிய அரசியலமைப்பு உருவாக்கப்படும் வரை, 13ஆவது திருத்தச்சட்ட அமலாக்கம்தான் தீர்வாக முன் நிறுத்தப்பட்டிருக்கிறது.

இவ்வாறான நிலையில், தேர்தல் விஞ்ஞாபனங்கள் வரட்டும் பார்த்துக் கொள்வோம் என்று ஏமாற்றிக்கொண்டு வந்த தமிழ் அரசுக் கட்சி இனி ஏதாவது ஒரு முடிவை எடுக்க வேண்டிய நிலையில் இருக்கிறது.

தமிழ்ப் பொது வேட்பாளருக்கு ஆதரவாக அந்தக் கட்சி தீர்மானத்தை எடுக்கா விட்டாலும், யாரேனும் ஒரு சிங்கள வேட்பாளரைக் கைகாட்டி விடுவதற்கு காரணத்தைத் தேடிக் கொண்டிருக்கிறது.



இத்தகைய கட்டத்தில் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு புதிய சிக்கல் முளைத்திருக்கிறது. இந்தத் தேர்தலின் போக்கை பார்க்கின்றபோது, முதல் சுற்று வாக்கு எண்ணிக்கையுடன் அடுத்த ஜனாதிபதி தெரிவு செய்யப்படுவதற்கான வாய்ப்பு இருக்கும் போலத் தெரியவில்லை.

செப்ரெம்பர் 21ஆம் திகதி நடக்க உள்ள தேர்தலில் 50வீதம்+1 வாக்குகளைப் பெற்றுக்கொள்வோம் என்ற நம்பிக்கை எந்த ஒரு வேட்பாளரிடமும் இல்லை.

அந்த நம்பிக்கை பிரதான வேட்பாளர்களிடம் படிப்படியாகக் குறையத் தொடங்கி விட்டது. அதனால் அவர்கள் இப்போது இரண்டாவது விருப்ப வாக்கைக் குறி வைக்கத் தொடங்கியிருக்கின்றனர்.

பெரும்பாலான பிரதான சிங்கள வேட்பாளர்களுக்கு, தமிழ் பொது வேட்பாளர் தமது வாக்கை உடைத்துக் கொண்டு போகப் போகிறார் என்பது நன்றாகத் தெரிந்து விட்டது. அதேபோல தமிழ்ப் பொது வேட்பாளரைப் போட்டியில் இருந்து விலகச் செய்வதற்கான வாய்ப்பு இனி இல்லை என்பதும் புரிந்து விட்டது.

முஸ்லிம் மக்களின் வாக்குகளை உடைத்துப் பிரிக்கும் முயற்சிகளில் அவர்கள் தீவிரமாக இறங்கியிருக்கின்றனர்.

இந்த நிலையில், தமிழ் பொது வேட்பாளரால் பிரியப்போகும் வாக்குகளை எவ்வாறு தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளமுடியும் என அவர்கள் சிந்திக்கத் தொடங்கி இருக்கின்றனர்.

கடந்த சிலநாட்களுக்கு முன்னர், யாழ்ப்பாணத்தில் நடந்த நிகழ்வு ஒன்றில் உரையாற்றிய ஐக்கிய மக்கள் சக்தியின் வடக்கு மாகாண அமைப்பாளர் உமாசந்திரா பிரகாஷ், ஒரு தமிழச்சி என்ற வகையில் தமிழ்ப் பொது வேட்பாளரை ஆதரிப்பதாகக் கூறி இருப்பதுடன், தமிழ் மக்கள் தங்கள் வாக்குகளைத் தமிழ்ப் பொது வேட்பாளருக்கு அளிப்பதுடன் இரண்டாவது வாக்கை சஜித் பிரேமதாசவுக்கு அளிக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டிருக்கிறார்.

இது புதியதொரு திருப்பத்தை ஏற்படுத்தி இருக்கிறது. தமிழர் தரப்பில் பொது வேட்பாளரை மட்டும் முன்னிறுத்தும் திட்டம் இருக்கிறது. இரண்டாவது தெரிவை யாருக்கு வழங்குவது என்ற பேச்சுக்கு யாரும் செல்லவில்லை.

இரண்டாவது வாக்கை யாரேனும் ஒரு சிங்கள வேட்பாளருக்கு வழங்கலாம் என்ற யோசனையை சி.வி.விக்னேஸ்வரன் முன்னர் வெளியிட்டிருந்தார். ரெலோவுக்கும் அந்தத் திட்டம் இருப்பதாகத் தெரிகிறது.

ஆனால், தமிழ் பொது வேட்பாளரை ஒரு கொள்கைக்காக முன்னிறுத்திவிட்டு இரண்டாவது தெரிவு வாக்கை சிங்கள வேட்பாளர் ஒருவருக்குக் கொடுக்கச் சொல்வது அபத்தமானதென்ற கருத்து வலியுறுத்தப்படுகிறது.

அதனால் இப்போது அதுபற்றி யாரும் பேசவில்லை. ஆனால், இரண்டாவது தெரிவு வாக்கை ஏன் அவர்கள் குறி வைக்கின்றனர்?

முதலாவது சுற்று வாக்கு எண்ணிக்கையில் யாருக்கும் 50வீதம்+1 வாக்குகள் கிடைக்காமல் போனால், இந்த இரண்டாவது தெரிவு வாக்கு மிகமிக முக்கியமானது.

முதல் சுற்றில் அதிகபட்ச வாக்குகளை பெற்ற இரண்டு பேர் தவிர, ஏனையோருக்கு அளிக்கப்பட்ட வாக்குகள் மீண்டும் எண்ணப்படும். அதில் இரண்டாவது விருப்பு வாக்கு யாருக்கு அளிக்கப்பட்டிருக்கிறதோ அவருடைய வாக்குகளுடன் அந்த எண்ணிக்கை சேர்க்கப்படும்.

அதன் இறுதியில் யார் அதிக வாக்குகளைப் பெற்றிருக்கிறாரோ அவரே அடுத்த ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்படுவார்.

இதனால்தான், இந்த இரண்டாவது செயல்முறைக்கு தேர்தல்கள் தயாராகி வருகிறது. இதற்கு முன்னர் நடந்த தேர்தல்களில் இவ்வாறான தயார்படுத்தல்கள் முன்னெடுக்கப்பட்டிருக்கவில்லை.

இந்த முறை இரண்டாவது வாக்கு எண்ணிக்கைக்கும் தயார் நிலையில் இருக்க வேண்டிய சூழலில் தேர்தல்கள் ஆணைக்குழு இருக்கிறது.

இதற்காகக் கூடுதல் வாக்கு எண்ணும் அதிகாரிகளை நியமிக்க வேண்டிய நிலையும் காணப்படுகிறது. இரண்டாவது வாக்கு எண்ணிக்கை இடம்பெறுமானால் அது பல்வேறு குழப்பங்களை ஏற்படுத்தக் கூடிய ஆபத்தும் உள்ளது.

முதல் சுற்று வாக்கு எண்ணிக்கைபோல, அது மிக துல்லியமானதாக இருக்கும் என எதிர்பார்க்கமுடியாது. அது குழப்பங்களை ஏற்படுத்தக்கூடும்.

அதைவிட, அவ்வாறு தெரிவு செய்யப்படும் ஜனாதிபதி உறுதியான மக்கள் ஆணையைக் கொண்டவராக இருக்க முடியாது. பலவீனமான ஆணை கொண்ட ஜனாதிபதியாக இருந்தால், அது பல்வேறு பிரச்சினைகளை ஏற்படுத்தும் ஆபத்தும் உள்ளது.

தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரான விமல் வீரவன்ச இன்னொரு திடுக்கிடும் தகவலை வெளியிட்டிருக்கிறார்.

ஜனாதிபதித் தேர்தல் வாக்கு எண்ணிக்கை நடக்கும்போது குழப்பங்களை ஏற்படுத்த சதித்திட்டம் தீட்டப்படுகிறது என்று, அவர் கூறியிருக்கிறார்.

வாக்கு எண்ணிக்கை நடக்கும்போது கலவரங்கள் ஏற்பட்டால், தேர்தல் முடிவுகளை ரத்துச் செய்யும் நிலைக்கு தேர்தல்கள் ஆணைக்குழு தள்ளப்படும்.

அவ்வாறான நிலையில், தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவே பதவியில் நீடிக்க வேண்டிய நிலை ஏற்படும். அவரைத் தொடர்ந்து அதிகாரத்தில் அமர்த்தும் நோக்கிலேயே இந்தச் சதித் திட்டம் தீட்டப்படுவதாக விமல் வீரவன்ச குறிப்பிட்டிருக்கிறார்.

இதற்குப் பின்னால் அமெரிக்காவின் சதித் திட்டம் இருப்பதாக அவர் கூறினாலும், அவரது இந்த எச்சரிக்கையை முற்றிலுமாகப் புறக்கணிக்க முடியாது.

அரசியலமைப்பு ரீதியாக இது செல்லுபடியானதா என்று கேள்வி எழுப்பவும் முடியாது.

ஏனென்றால், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முழுமையாக நம்பக்கூடிய ஒருவரல்ல. உள்ளூராட்சித் தேர்தலை நடத்த முடியாமல் செய்தவர். அதனால் அவர் மக்களின் அடிப்படை உரிமையை மீறி இருப்பதாக அண்மையில் உயர் நீதிமன்றத்தினால்கூட குற்றம் சாட்டப்பட்டிருக்கிறார்.

தேர்தலை நிறுத்தியதற்காகவோ, உயர் நீதிமன்றம் கண்டித்துள்ளது என்பதற்காகவோ, தான் வருந்தவில்லை என்றும் ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டிருந்தார்.

அதாவது ஜனநாயகத்தையோ மக்களின் அடிப்படை உரிமைகளையோ மீறுவதைப் பற்றி அவர் கவலைப்படக்கூடிய நிலையில் இல்லை.

ஜனாதிபதித் தேர்தலை நிறுத்துவதற்குக் கூட அவர் பல்வேறு முயற்சிகளை முன்னெடுத்துப் பார்த்து தோல்வி கண்டார்.

அப்படிப்பட்டவர் அதிகாரத்தைத் தொடர்ந்து தக்க வைப்பதற்காக எந்தக் குழப்பங்களையும் மேற்கொள்ளலாம் என்று நம்புவதற்கு இடம் உண்டு.

தொடர்ச்சி 08ஆம் பக்கம்

விளம்பரம்
VLAMBARAM

34ஆவது ஆண்டில்

பதிப்பாளர்: ராஜா மகேந்திரன்
ஆசிரியர்: சத்தியா மகேந்திரன்
முகாமையாளர்: கமல் செல்லையா
ஊடகப் பொறுப்பாளர்: விஜய் செல்லையா
அலுவலகப் பொறுப்பாளர்: சுதர்சினி D.

'விளம்பரம் பப்ளிகேஷன்ஸ் இங்' நிறுவனத்தால் வெளியிடப்படும் 'விளம்பரம்' பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களும், விளம்பரங்களுக்கு விளம்பரதாரர்களுமே பொறுப்பாளர்கள். விளம்பரம் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்களை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ ஆசிரியரின் அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.

Vlambaram Publications Inc.
GTA Square, 5215 Finch Ave.E.,
#201, Toronto, ON M1S 0C2, Canada
TEL- 416-282-8059
email:vlambaram@sympatico.ca
web: www.vlambaram.com

Vlambaram Publications Inc. 2020 All Rights Reserved

# வரலாறு.....

01ஆம் பக்கத்தொடர்ச்சி

கட்டுரையில் சீனா மற்றும் இந்தியா பற்றியும் தெரிவித்துள்ளார்.

அமெரிக்கா இந்தோ-பசிபிக் பகுதியில் இருந்து தனது கவனத்தை திசை திருப்பி தனது வளங்களை உக்ரைன் மற்றும் இஸ்ரேல் போர் முனைகளில் விரயமாக்கிக் கொண்டு இருக்கிறது. இவ்வாறு நடைபெறுவதை சீனா நன்றாக அவதானித்துக் கொண்டு இருக்கிறது. சன் சூ (Sun Tzu) எழுதிய புத்தகமான 'போர்க் கலை' (The Art of War)இல் அவர், ஒரு போரில் வெல்லுவதன் முதல்படி "போராடாமல் அனைவரையும் வெல்வதே" (Win all without fighting) என்று தெரிவித்துள்ளார். இதைத்தான் தற்போது சீன அரசு செய்து கொண்டிருக்கிறது.



Israeli PM Benjamin Netanyahu Thanks: X / Benjamin Netanyahu

இந்தியா தனது 80% கச்சா எண்ணெயை வளைகுடாப் பகுதியில் (Gulf region) இருந்து இறக்குமதி செய்கின்றது. மத்திய கிழக்குப் பிரதேசத்தில் ஏற்படும் போரால் எண்ணெய் விலை அதிகரிப்பு, மற்றும் வழங்கலில் ஏற்படும் தடை இந்தியாவின் பொருளாதாரத்தையும் மிகவும் பாதிக்கும். அத்துடன் வளைகுடா நாடுகளில் வாழும் மற்றும் பணிபுரியும் 9.5 மில்லியனுக்கு அதிகமான இந்தியர்களின் நலனில் பாதிப்பும் ஏற்படும்.

இஸ்ரேல் இந்தியாவிற்கான முக்கியமான இராணுவத் தளபாடங்கள் வழங்கும் நாடு. ஈரான் இந்தியாவிற்கான முக்கிய வர்த்தகப் பங்காளி. ஈரான் மற்றும் இஸ்ரேல் ஆகிய இரு நாடுகளுடனும் அன்பான உறவைக் கொண்டுள்ள நாடு இந்தியா. மத்திய கிழக்கு நாடுகளின் நிலையற்ற தன்மை இந்தியாவின் தேசிய நலனுக்கு நல்லது அல்ல. எனவே ஈரான் மற்றும் இஸ்ரேலுக்கு நண்பனாக இருக்கும் இந்தியா இவ்விரு நாடுகளையும் ஒருவர் மீதும் தற்போதைய நிலைக்கு பழி சுமத்தாமல் இரு நாடுகளுடனும் பேச்சுவார்த்தைகளை நடத்தித் தற்போதுள்ள தீவிர நிலையைக் குறைக்க முன்வர வேண்டும். இந்தியா தனது இராஜதந்திர புத்திசாலித்தனத்தைப் பாவித்து ஈரானுக்கும் இஸ்ரேலுக்குமான நெருக்கடியைத் களைந்து அமைதியை ஏற்படுத்த முயலவேண்டும். இவ்வாறு Lt.Gen.AB Shivane தனது கட்டுரையில் தெரிவித்துள்ளார்.



Hezbollah drone intercepted by Israeli air forces over north Israel Thanks: Jalaa MAREY / AFP

2024 ஒகஸ்ற் 25இல் இஸ்ரேலுக்கும் ஹெஸ்பொல்லாவுக்கும் இடையேயான வான்வழித் தாக்குதல்கள் நடைபெற்றன. வடக்கு இஸ்ரேல் பகுதி முழுவதும் எச்சரிக்கை ஒலி எழுப்பப்பட்டது. சர்வதேச விமான நிலையமும் மூடப்பட்டு விமானங்கள் திருப்பி விடப்பட்டன.

இஸ்ரேலின் இராணுவ செய்தித் தொடர்பாளர் கடற்படைத் தளபதி டானியல் ஹகாரி (Rear.Adm.Daniel Hagari) ஊடகங்களுக்குத் தெரிவிக்கையில் அண்ணளவாக 100 இஸ்ரேலிய விமானங்கள் 270 வான்வழி இலக்குகளை தாக்கியதாகக் கூறினார். அவை வடக்கு இஸ்ரேலை இலக்காகக் கொண்டு ஹெஸ்பொல்லாவால் ஏவப்பட்ட ரொக்கெற் ஏவுகணைகள் (Rocket Launchers) ஆகும். அவர் பெரும்பாலான ரொக்கெற் ஏவுகணைகளும் ஆளில்லாத விமானங்களும் (drones) தரையைத் தொட முன்னர் முறியடிக்கப்பட்டன என்றார்.



Smoke billows from the site - Israeli airstrike on Zibqin in southern Lebanon

ஹெஸ்பொல்லா ஊடகங்களுக்கு விடுத்த அறிக்கையில் 320இற்கு மேற்பட்ட Katyusha ரொக்கெற் ஏவுகணைகள் இஸ்ரேலின் பல தளங்களை இலக்காகக் கொண்டு ஏவப்பட்டது. அத்துடன் அதிக அளவு எண்ணிக்கையான ஆளில்லாத விமானங்களும் இஸ்ரேலின் பல தளங்களை இலக்காகக் கொண்டு செலுத்தப்பட்டது என அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

Katyusha 107-122மிமீ ரொக்கெற் ஏவுகணைகள் 40கிமீ தூரம்வரை சென்று தாக்கக் கூடியன. ஹெஸ்பொல்லா போராளிகளிடம் இருக்கும் Scud B.C.D வகை ஏவுகணைகள் 500கிமீ தூரம்வரை சென்று தாக்கக் கூடியன. ஆனால் இவை சேதம் விளைவிக்க இஸ்ரேலின் 'குவிந்த இரும்புக் கூரை' (Iron Dome) வான் பாதுகாப்பு அமைச்சை விலத்திச் செல்ல வேண்டும்.



Displaced Palestinians - fled Rafah Thanks: REUTERS

இஸ்ரேலின் வடக்கு நகரமான ஏக்கரில் (Acre) வாழும் இளைப்பாறிய ஆசிரியரான Saadia Even Tsur (76 வயது) ஊடகத்திற்கு தெரிவிக்கையில் தான் ஜெப ஆலயத்தில் இருந்து வீடு வந்து பார்க்கும்போது எனது படுக்கை அறை ஜன்னல் உடைந்து படுக்கை முழுவதும் அவை சிதறிக் கிடந்தன என்றார். இது நான் வீடு திரும்ப ஐந்து நிமிடங்களுக்கு முன்னர் நடந்திருந்தது என்று கடவுளின் அருளை வியந்து கூறினார்.

இரு தரப்பினரும் தங்களுக்கு இடையேயான தாக்குதல்களை நிறுத்திய பின்னர் லெபனானில் மூவர் இறந்துள்ளதாகவும் இஸ்ரேலில் ஒருவர் இறந்துள்ளதாகவும் தெரிவித்தனர்.

"கடந்த மாதம் மூத்த தளபதி Fuad Shukrஇனுடைய படுகொலைக்கான ஈரானிய ஆதரவுக் குழுவின் திட்டமிடப்பட்ட பதிலடி சரமாரித் தாக்குதல் தற்போது திட்டமிட்டபடி முடிக்கப்பட்டுள்ளது" என ஹெஸ்புல்லா தலைவர் சையத் ஹசன் நஸ்ரல்லா (Sayyed Hassan Nasrallah) ஊடகங்களுக்குத் தெரிவித்தார்.




Hezbollah secretary general Hassan Nasrallah Thanks: CNN

அவர் மேலும் தெரிவிக்கையில் "எவ்வாறாயினும் ஈரானிய ஆதரவுக் குழு தனது தாக்குதலால் ஏற்பட்ட விளைவுகளை மதிப்பீடு செய்கிறது. அது போதுமானதாக இல்லாவிட்டால் மற்றொரு முறை பதிலடித் தாக்குதலை நடத்தும் உரிமையை நாங்கள் வைத்திருக்கிறோம்" என்று தெரிவித்தார்.

இஸ்ரேலிய அரசின் வெளியுறவு மந்திரி தெரிவிக்கையில், "நாங்கள் நாடு தழுவிய போரை நாடவில்லை. ஆனால் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு இது கதையின் முடிவல்ல என எச்சரித்துள்ளதாகக் கூறினார்.

இஸ்ரேலியப் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு தெரிவிக்கையில் "எங்கள் நாட்டைப் பாதுகாக்க எங்களால் முடிந்த அனைத்தையும் செய்ய நாங்கள் உறுதியாக இருக்கிறோம். யார் எமக்குத் தீங்கு விளைவித்தாலும் அவருக்கு நாங்கள் தீங்கு விளைவிப்போம்" என்று கூறினார்.



Prime Minister Benjamin Netanyahu (center) and Defense Minister Yoav Gallant (2 R) Thanks: Maayan Toaf/Defense Ministry

அவர் மேலும் தெரிவிக்கையில், "வடக்கு இஸ்ரேலை இலக்காகக் கொண்ட ஆயிரக் கணக்கான ரொக்கட்டுக்களை இராணுவம் முறியடித்ததுடன் நாட்டின் மையப்பகுதியை நோக்கி வந்த ஆளில்லாத விமானங் களையும் இராணுவம் சுட்டு வீழ்த்தியது. நான் மீண்டும் சொல்கிறேன் இது கதையின் முடிவு அல்ல" என்றார்.

இஸ்ரேலிய அரசு விடுத்த அறிக்கையில், "எந்தவொரு இராணுவ இலக்கையும் ஹெஸ்பொல்லா தாக்கவில்லை. கடற் படையைச் சேர்ந்த ஒரு சிப்பாய் கொல்லப்பட்டுள்ளார். மேலும் இருவர் உடைந்த துண்டுகளால் காயமடைந் துள்ளனர்" எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.




Demonstrators protest calling for the release of Israeli hostages held in the Gaza Strip in Tel Aviv Thanks: Flash90

ஹெஸ்பொல்லா போராளிக்குழு விடுத்துள்ள அறிக்கையில் "இரண்டு ஹெஸ்பொல்லா போராளிகளும் நேசக் குழுவைச் (allied group) சேர்ந்த ஒரு போராளியும் கொல்லப்பட்டனர்" எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க அரசால் முன்னெடுக்கப்பட்டு கெய்ரோ (Cairo)இல் நடைபெற்ற காசாவில் போர்நிறுத்தம் ஏற்படுத்த முயற்சிக்கப்பட்ட பேச்சுவார்த்தைகள் எதுவித உடன்பாடும் இல்லாமல் ஒகஸ்ற் 25இல் முடிவடைந்தன. ஹமாஸ் மற்றும் இஸ்ரேல் பிரதிநிதிகள் மத்தியஸ்தர்கள் முன்வைத்த பலவற்றை ஒப்புக் கொள்ள வில்லை என்று எகிப்திய பாதுகாப்பு வட்டாரங்களைச் சேர்ந்த இருவர் 'Independent' ஊடகத்திற்குத் தெரிவித்தனர்.

For your Special Occasions
SHORT TERM RENTAL
TORONTO
Large House available for your Special Occasions Short Term Rental in Scarborough. Daily rental possible.
If Interested email :
georgeparan1@gmail.com



**முடியாது என்ற சொல்லை வேண்டிய இடங்களில் முடியாது என்று உடனே சொல்லி விடுங்கள்,,, இது பல பிரச்சினைகளை ஆரம்பத்திலே தீர்த்துவிடும்**

# ரணில் வீசும் வலை

## – முகிலன் –

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் தமிழ் பொது வேட்பாளராக அறிவிக்கப்பட்ட அரியநேத்திரன், தனது பிரசாரத்தைத் தொடங்கிவிட்டார். இந்தப் பிரசாரங்களை முன்னெடுப்பதில், ஒருங்கிணைப்பதில் தமிழ்த் தேசிய பொதுக் கட்டமைப்பு நெருக்கடிகளை எதிர்கொள்கிறது.

நிதி, ஆளணி போன்ற பல்வேறு சிக்கல்களைத் தாண்டியே தமிழ் பொது வேட்பாளருக்கு ஆதரவான பிரசாரங்களை முன்னெடுக்கவேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது. இது ஏற்கனவே எதிர்பார்க்கப்பட்ட ஒரு பிரச்சினைதான்.

தமிழ் தேசிய அரசியல் கட்சிகள் அடிமட்டத்தில் இருந்து தங்களைக் கட்டமைக்கத் தவறியதால் ஏற்பட்டுள்ள சிக்கல் இது. பொருளாதாரரீதியான நெருக்கடிகளையும் தாண்டவேண்டிய சூழல் அவர்களுக்கு இருக்கிறது.

இத்தகைய நிலையில், தமிழ்த் தேசிய கட்சிகள், தரப்புகளை நோக்கி பிரதான சிங்கள வேட்பாளர்கள் கைநீட்டத் தொடங்கி இருக்கின்றனர். அவர்களை பேச அழைக்கின்றனர்.

இந்த அழைப்புக்கு இரண்டு பிரதான காரணங்கள் இருக்கின்றன.

ஒன்று சாத்தியம் இல்லை எனக் கருதப்பட்ட தமிழ்ப் பொது வேட்பாளர் அறிவிக்கப்பட்டு, பிரசாரம் தொடங்கப்பட்டுள்ள நிலையில், அவருக்கு தமிழ் மக்கள் மத்தியில் அதிகரித்து வருகின்ற ஆதரவு.

இன்னொன்று, தமிழ் மக்களின் வாக்குகள் கிடைக்காமல் போனால், தங்களது வெற்றி இலகுவானதாக இருக்காது என்ற உண்மை அவர்களுக்குப் புரியத் தொடங்கி இருக்கிறது.

சில மாதங்களுக்கு முன்னர், யாழ்ப் பாணத்துக்குப் பயணம் மேற்கொண்டிருந்த ரணில் விக்கிரமசிங்க, நாடாளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரனின் வீடு தேடிச்சென்று, தமிழ் பொது வேட்பாளரை நிறுத்தப் போகிறீர்களா? அது சாத்தியப் படுமா? என்று கேள்வி எழுப்பியதுடன், அதற்கு வாய்ப்பில்லை என்றும் சவால் விட்டுச் சென்றிருந்தார். அதே நிலைப்பாட்டிலேயே, ஏனைய பிரதான சிங்கள வேட்பாளர்களும் காணப்பட்டனர்.

தமிழ் மக்கள் மத்தியில், தமிழ் அரசியல் கட்சிகள் மத்தியில் காணப்பட்டு வந்த முரண்பாடுகளும், போட்டி பூசல்களும், தமிழ் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்துவதற்குச் சாத்தியம் இல்லை என்ற கருத்து அப்போது காணப்பட்டது.

இப்போது அந்த நிலை மாறி இருக்கிறது. தமிழ் பொது வேட்பாளர் ஒருவர் அறிவிக்கப்பட்டு விட்டார். இதனால் பிரதான சிங்கள வேட்பாளர்கள் பதற்றமடைந்திருக்கின்றனர். தங்களின் வாக்குகள் நிச்சயம் உடையப் போகிறது என்பது அவர்களுக்குத் தெரியும். அதனால் ஏற்பட்ட பதற்றம்தான் இது.

அடுத்து, பிரதான சிங்கள வேட்பாளர்களுக்குள் போட்டி அதிகரித்திருக்கின்ற சூழலில், அவர்களின் வெற்றி வாய்ப்பு கேள்விக்குள்ளாகியிருக்கிறது.



முதல் சுற்று வாக்கு எண்ணிக்கையில், 50வீதம்+1 வாக்குகளைப் பெற முடியாமல் போனால், இரண்டாவது சுற்று வாக்கு எண்ணிக்கைக்குச் செல்லவேண்டியிருக்கும்.

அது சிலவேளைகளில், முதல் சுற்றில் முன்னணியில் இருந்தவரைக்கூட, தோற்கடித்துவிடும். முதல் சுற்றில் பின்தங்கி இருந்தவரை ஜனாதிபதி ஆக்கிவிடவும் வாய்ப்பு உள்ளது.

எனவே, இரண்டாவது சுற்று வாக்கு எண்ணிக்கைக்குச் செல்லாமல் 50வீதம்+1 வாக்குகளைப் பெற்று விடவேண்டும் என்பதில் பிரதான சிங்கள வேட்பாளர்கள் குறியாக இருக்கின்றனர்.

இந்த நிலையில், தமிழ்ப் பொது வேட்பாளரால் ஏழக்கூடிய அச்சுறுத்தலைச் சமாளிப்பதற்கு, அவர்கள் பேசுவதற்கு அழைக்கத் தொடங்கியிருக்கின்றனர்.

தமிழ்ப் பொது வேட்பாளராக அரிய நேத்திரன் அறிவிக்கப்பட்டதும், தமிழ்த் தேசியப் பொதுக்கட்டமைப்பின் 7 கட்சிகள் மற்றும் சிவில் அமைப்புகளைச் சேர்ந்த தரப்புகளுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் பேச அழைப்பு விடுக்கப்பட்டது.

அதுபோல சஜித் பிரேமதாசவும், தனிப்பட்ட முறையில் தொலைபேசியில் அழைத்துப் பேச வருமாறு கேட்டிருந்தார். இந்தச் சந்திப்பில் பங்கேற்பதில்லை என தமிழ்த் தேசிய பொதுக் கட்டமைப்பு தீர்மானித்தது. ஆனாலும் புளொட், ரெலோ, ஜனநாயகப் போராளிகள் கட்சி என்பன, ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்தன. சஜித் பிரேமதாசவை ரெலோவும் புளொட்டும் சந்தித்தன.

ஒரு பக்கத்தில் பொது வேட்பாளரை நிறுத்திக்கொண்டு இன்னொரு பக்கத்தில் இந்தக் கட்சிகள் ரணில் மற்றும் சஜித்துடன் பேசச் சென்றது சந்தேகங்களையும் விமர்சனங்களையும் ஏற்படுத்தி இருந்தது.

ஆனால், தாங்கள், பொது வேட்பாளரை நிறுத்தியதற்கான காரணத்தை எடுத்துக் கூறுவதற்காகவே சந்திப்புக்குச் சென்றதாக அந்தக் கட்சிகள் விளக்கமளித்து இருந்தன.

இந்நிலையில், தமிழ் பொது வேட்பாளரை அறிவித்த பொதுக் கட்டமைப்பினரே! என்று விளித்து, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பேச்சுக்கு வருமாறு மீண்டும் அழைப்பு விடுத்திருக்கிறார்.

“தமிழ் பொதுக் கட்டமைப்பினரின் உறுப்பினர்களே”,

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் எனது வெற்றிக்கு தமிழ்ப் பொதுக்கட்டமைப்பினரின் ஆதரவைக் கோர விரும்புவதுடன், அவ்வாறு ஆதரவளிப்பதை முன்னிறுத்தி தமிழ் சமூகத்தின் எதிர்பார்ப்புக்கள் என்னவென்பது பற்றிக் கலந்துரையாடுவதற்கு உங்களுக்கு அழைப்பு விடுக்கிறேன்” என்று ரணில் விக்கிரமசிங்க அந்த அழைப்பில் குறிப்பிட்டு இருக்கிறார்.

இந்தச் சந்திப்பு எப்போது நடக்கும் என்று அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருக்க வில்லை.

தமிழ் தேசிய பொதுக் கட்டமைப்பின் உறுப்பினர்களே, என அந்தக் கடிதத்தில் விளிக்கப்பட்டிருந்தபோதும், அந்தக் கடிதம் ரெலோ மற்றும் ஜனநாயகப் போராளிகள் கட்சிக்கு மட்டும் கிடைத்திருக்கிறது.

தமிழ்த் தேசிய பொதுக்கட்டமைப்பின் ஏனைய பங்காளிக் கட்சிகளுக்கோ அல்லது சிவில் பிரதிநிதிகளுக்கோ கிடைக்கவில்லை.

அப்படியானால் இந்த அழைப்பை எவ்வாறு எடுத்துக் கொள்வது என்ற கேள்வி எழுந்திருக்கிறது.

தமிழ்த் தேசிய பொதுக்கட்டமைப்புடன் பேசி ஓர் இணக்கப்பாட்டுக்கு வர அவர் முனைகிறாரா அல்லது பேரம் பேசுதல் என்ற பெயரில் தமிழ்த் தேசிய பொதுக்கட்டமைப்புக்குள் விரிசலையும் குழப்பத்தையும் ஏற்படுத்த முனைகிறாரா என்ற சந்தேகம் தோன்றியிருக்கிறது.

ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்ட பிரதான சிங்கள வேட்பாளர்களுக்கு தமிழ் பொது வேட்பாளரால் அச்சம் ஏற்பட்டிருக்கிறது. அதைச் சமாளிக்க அவர் இருமுனை நகர்வை முன்னெடுக்கிறார்.

பேச்சு என அழைத்து பேரம் பேசவும் முனைகிறார். அதற்கு ஒத்துவராது போனால், அந்தப் பேச்சுக்களைப் பயன்படுத்தி, பொதுக்கட்டமைப்புக்கு மத்தியில் குழப்பத்தை ஏற்படுத்தி, பொதுவேட்பாளரைப் பலவீனப்படுத்தவும் முற்படுகிறார்.

2002ஆம் ஆண்டு விடுதலைப் புலிகளுடனான போர்நிறுத்தம் மற்றும் பேச்சுக்களை அவர் எப்படிக் கையாண்டாரோ, அதே அணுகுமுறையைத்தான் இப்போதும் கையாள முற்படுகிறார்.

பேச்சுக்குச் செல்வோரை இணங்கிவரச் செய்வதற்கு முயற்சிப்பார். அது சரிவராமல் போனால், பேசச் சென்றவர்களுக்கும் பொது வேட்பாளரை நிறுத்திய ஏனைய தரப்புகளுக்கும் இடையில் இடைவெளியை ஏற்படுத்தி, பலவீனப்படுத்துவார்.

2009இல் ஆயுதப் போராட்டம் எவ்வாறு முடிவுக்குக் கொண்டுவரப்பட்டதோ- அதுபோலவே பொது வேட்பாளரின் திட்டத்தையும், தமிழருக்கு தோல்விகரமான தொன்றாக மாற்றுவதற்கு ரணில் விக்கிரமசிங்க முற்படுகிறார்.

அதனால்தான் அவர், பொதுக்கட்டமைப்பினரை முழுமையாக அழைக்காமல், சிலரை மாத்திரம் பேச்சுக்கு அழைத்திருக்கிறார். இது அழைக்கப்பட்டவர்கள் தொடர்பாக நம்பிக்கையீனம் ஏற்படவும் ஒற்றுமையான இந்த முயற்சியில் கீறல்கள் ஏற்படவும் வழிவகுக்கும்.

தமிழ்ப் பொது வேட்பாளர் என்பது தமிழ் மக்களின் மீள் திரட்சியை உறுதி செய்யும் ஒன்றாக மாறுகின்றபோது, அதனை சிங்களத் தேசியவாத சக்திகள் விரும்பாது. அதனைத் தோற்கடிக்க ஒன்றிணையும்.

இத்தகைய ஓர் ஆபத்தான சூழல் உள்ளதை பொதுக்கட்டமைப்பு கவனத்தில் எடுத்திருக்கிறது.

பொதுக்கட்டமைப்பில் உள்ள ரெலோ போன்ற தரப்புகள் இன்னமும், பேச அழைப்பவர்களுடன் பேசுவோம், பொது வேட்பாளரையும் ஆதரிப்போம் என இரண்டு தோணியில் கால்வைத்திருக்கவே விரும்புகின்றனர்.

ஆனால் இந்த விவகாரம் மோசமான விளைவுகளை ஏற்படுத்தப் போகிறது என்பதை உணர்ந்துள்ள பொதுக் கட்டமைப்பு அவசரமாகக்கூடி ஒரு முடிவை எடுத்திருக்கிறது.

தெற்கிலிருந்து வரும் பேச்சு அழைப்புக்களை ஏற்பதாயினும் சரி, நிராகரிப்பதாயினும் சரி ஒன்றாகவே சேர்ந்து முடிவெடுப்பது என்பதே அது. இதனை எல்லாத் தரப்புகளும் ஏற்றுக் கொண்டாலும், கடைசிவரை அதில் உறுதியாக இருக்க வேண்டும்.

இல்லாவிட்டால் ரணில் விக்கிரமசிங்க இதற்குள் புகுந்து தனது வேலையைக் காண்பித்து விடுவார். அதற்குப் பின்னர், பொது வேட்பாளரை தமிழ் மக்கள் பேரம் பேசுபவராகப் பார்க்கின்ற நிலை ஏற்படும். அவ்வாறான நிலை ஏற்பட்டால், அது தமிழரின் மீள் எழுச்சிக்கான மற்றொரு வாய்ப்பை நசுக்கி விடும்.



# தமிழரின் சர்வதேச புலம்பெயர்தலும், கல்வியும்



பேராசிரியர்
மா. சின்னத்தம்பி

### கடந்த இதழ் தொடர்ச்சி...

## நெதர்லாந்து

இலங்கைத் தமிழ் அகதிகள் இங்கே 1983இன் பின் குடியேறியுள்ளனர். 20,000இற்கு மேற்பட்டோர் இங்கு வாழ்ந்து வருகின்றனர்.

இவர்களை டச்சுக்காரர் அல்லது ஒல்லாந்தர் என்றும் அழைப்பதுண்டு. உலகின் முதலாவது நாட்டுக் கூட்டிணைப்பு குடியரசு ஆகும். வடமேற்கு ஐரோப்பாவின் பிரதான ஐந்து நதிகளின் கழிமுகமாக இந்த நாடு உள்ளது. உலகின் மிகப்பெரிய துறைமுகமாக ரொற்றடாம் விளங்குகிறது.



இங்கு 27% நிலம் கடல் மட்டத்திலும் கீழே உள்ளது. மணற்கும்பிகளும், ஏரிகளும் பாதுகாக்கின்றன.

இந்த ராச்சியம் 1648இல் உருவாக்கப்பட்டது. 17 மில்லியன் மக்கள் தொகை இருந்தாலும் ஒரு சதுர மைலுக்கு 1245பேர் உள்ளனர். இதன் பரப்பளவு 16,033 சதுர மைல்களாகும்.

இலங்கையில் பிரித்தானியருக்கு முன்பு கரையோரங்களை ஆட்சி செய்த இவர்கள் புரட்டஸ்தாந்து மத பாடசாலைகளை அதிகம் தமிழர் பிரதேசங்களில் நிறுவினர். பாடசாலை நிர்வாகத்தில் பெரிய மாறுதல்களை அறிமுகப்படுத்தியவர்கள் இவர்கள்தான்.

முன்னைய தமது குடியேற்ற நாடாகிய இலங்கையிலிருந்து தமிழர் வந்ததால் அனுமதி வழங்கி உதவினர். மத மாற்ற இலட்சியத்துடன் அதிகளவு ஆரம்பப் பாடசாலைகளை நிறுவியமை இவர்களது சிறப்புப் பணியாகும். எம்மவரது ஆரம்பக்கல்வி வளர்ச்சிக்கு அவை பெரிதும் அடிப்படையாகின.

## தென்னாபிரிக்கா

தென்னாபிரிக்கக் குடியரசு 1934இல் உருவானது. 80 வருடங்கள் சிறுபான்மை வெள்ளையரின் கீழியங்கிய நாடு இது. 471,008 சதுர மைல் பரப்பளவு கொண்ட இந்த நாட்டில் சதுர மைலுக்கு 101 பேர் வாழ்கின்றனர். 70% கறுப்பின மக்கள் இருந்தாலும் 10%மாயுள்ள வெள்ளையர்கள் பொருளாதாரத்தைக் கட்டுப்படுத்துகின்றனர்.

செல்வப் பங்கீட்டில் ஏற்றத்தாழ்வு நிலவுகிறது. எயிட்ஸ் நோயினால் பாதிக்கப்படுவோர் (2016) ஐந்து மில்லியன்வரை காணப்படுவது பிரச்சினையாகும். கடந்த நூற்றாண்டுகளில் உலகின் தங்கத்தில் 50%த்தை இந்த நாடே வழங்கியிருந்தது.

இலங்கைத் தமிழர் (2016) 250,000 பேர் இங்கு குடியேறி வாழ்கின்றனர். அதிகமானோர் 1980களுக்குப் பின்பே இங்கு குடியேறினர்.



ஆபிரிக்காவில் பெரிய நாடாகவும் அதிகம் வளர்ச்சி பெற்ற நாடாகவும் இது விளங்குகிறது. சுற்றுலாத்துறையினால் அதிக அந்நியச் செலவாணி பெறும் நாடாகவும் இது விளங்குகிறது.

## ஐக்கிய அமெரிக்கா

உலகின் வல்லரசு பொருளாதார வல்லமை மிக்கது. இந்து சமுத்திர அமைதியில் ஆர்வம் கொண்ட நாடு இத்தகைய பல அடிப்படைகளில் இலங்கைத் தமிழர் இனப் பிரச்சினையில் அதிக அக்கறை கொண்டு இயங்குவதில் இந்தியாவைப் போலவே அமெரிக்காவும் முக்கியமானது. 1776இல் உருவான இந்த நாட்டில் 300 மில்லியன் மக்கள் உள்ளனர்.

கனடாவில் அதிகளவு இலங்கைத் தமிழர் வசிப்பதால் அமெரிக்காவுக்கு கல்வி கற்பதற்கும், தொழில்புரிவதற்கும், வசிப்பதற்கும் பயணிப்பது இலகுவானதாகிவிட்டது. இங்கு 2016 அளவில் 130,731 பேர் எம்மவர்கள் வசிப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

உலகின் முன்னணி பொருளாதார பேராற்றல் கொண்டதாயுள்ள மூன்றாவது பெரிய புவியியல் பிரதேசமாகவும் இது விளங்குகிறது. 1787இல் எழுதப்பட்ட பழைய அரசியல் யாப்பைக் கொண்டது. பலதடவை திருத்தங்கள் செய்து கொண்டுள்ளமை சிறப்பம்சமாகும்.

காடுகள் நிறைந்த மலைத் தொடர்களும், மிசூரி மிசிசிப்பி நதியும் கனடிய ஐம்பெரும் வாவிப் பிரதேசமும் அமெரிக்காவின் செழிப்புக்கு உதவுகின்றன. நான்கு வகையான காலநிலைப் பிரதேசங்கள் இங்குள்ளன. உலகின் மிக அழகான பெரிய புளோரிடாவில் உள்ள மியாமி கடற்கரை தனிச்சிறப்புப் பெற்றுள்ளது. அதேபோல பாலைவனமும், ஹரிகேன் புயல் காற்றும்கூட பாதிப்புக்களை உருவாக்கி வருகின்றன.

அகதிகளின் அரசியல் நோக்கிலும், போக்கிலும் அமெரிக்கா தவிர்க்க முடியாத பெரிய சக்தியாகவே உணரப்படுகின்றது.

3,717,792 சதுர மைல் பரப்பளவு கொண்ட அமெரிக்காவில் சதுர மைலுக்குரிய குடியடர்த்தி 84 பேராகவேயுள்ளது.




உலக வியாபாரத்தில் அமெரிக்க டொலரின் பெறுமானமும் பரிவர்த்தனைப் பெருக்கமும் தொடர்ந்து ஆதிக்கம் செலுத்தி வருகின்றன.

## பிஜி தீவுகள்

பசுபிக் சமுத்திரத்தின் தென்பகுதியில் உள்ள தீவுகள் இவையாகும். மலைகளும், கடற்கரையோர சுண்ணக்கல் பாறைகளும் காணப்படுகின்றன.

பிரித்தானியா கரும்புத் தோட்டங்களுக்குத் தொழில்புரியக் கொண்டு வந்த இந்தியத் தொழிலாளரின் வம்சா வழியினர் அதிகம் உள்ளனர். இந்துக்கள் 38%த்தினராயுள்ளனர். இந்தியர்கள் 44% மாயுள்ளனர்.

இலங்கைத் தமிழரில் பட்டதாரிகளும், விரிவுரையாளர்களும், வைத்தியர்களும் குடிபெயர்ந்து இங்கு வாழ்கின்றனர். இவர்கள் குடியேறுவதற்கு முன்பே தமிழ், தெலுங்கு, உருது, ஹிந்து பேசுவோர் கணிசமாக இங்கு வாழ்ந்து வந்தனர்.

இலங்கைத் தமிழர் 80,000பேர் வரை வாழ்ந்து வருகின்றனர். இங்கிருந்து அவுஸ்திரேலியாவுக்கும், நியூசிலாந்துக்கும் அதிகமானோர் குடிபெயர்வதுண்டு.

1970இல் பிஜி தீவுகளின் குடியரசு உருவானது. 7054 சதுர மைல்களும் 850,000 குடித்தொகையும் கொண்ட இங்கு சதுர மைலுக்கு 120 பேர் வசிக்கின்றனர். 1946அளவில் இந்திய வம்சாவழியினர் தொகை சுதேசிகளான பிஜியர்களைவிட அதிகரித்தது. 2000ஆண்டில் இந்தியர் செல்வாக்கில் உருவான அரசாங்கம் பதவியிலிருந்து அகற்றப்பட்டது. இதனால், அதிகமானோர் பதற்றம் காரணமாக நாட்டை விட்டு வெளியேறினர். அவுஸ்திரேலியாவுக்கும் பலர் குடிபெயர்ந்தனர்.

சீனி உற்பத்தி, தங்கச் சுரங்கங்கள், மரம், வணிகமுறை, மீன்பிடித்தொழில் என்பன பொருளாதாரத் துறைகளாகக் காணப்படுகின்றன. இலங்கைத் தமிழர் எல்லா இனத்தவருடனும் இணக்கமாக இங்கே வாழ்கின்றனர்.

இலங்கைத் தமிழர் இலங்கை சுதந்திரம் பெற்ற பின்பு கல்லோயா குடியேற்றம், தனிச்சிங்களச் சட்டம், உயர்கல்வியில் தரப்படுத்தல் போன்ற பாரபட்சமான அரசியல் நடைமுறைகளால் பாதிக்கப்பட்டு மூன்று தசாப்தங்கள் ஆயுதப் போராட்டங்களையும் நிகழ்த்தினர். இதனால் முப்பது ஆண்டு அமைதியின்மை, இடப்பெயர்வுகள் என்பன வாழ்க்கையின் போக்கனை மாற்றின. உலகின் பல நாடுகளுக்கும் புலம் பெயர்ந்தனர். அத்தகைய முதன்மை நாடுகள் பற்றி விளக்கியிருந்தேன்.



பல்வேறு புவியியல் நிலைமைகள் பல விதமான காலநிலைகள், புதிய வகையான பொருளாதாரச் செயல்பாடுகள், தொழில் முறைக்கட்டமைப்பு மாற்றங்கள் தொடர்பான முரண் நிலைகளை ஈடுசெய்து சமநிலை வாழ்வைக் கட்டமைத்துள்ளனர்.

இன்று அவர்களும், அவர்களது இரண்டாம், மூன்றாம் தலைமுறை சார்ந்த அவர்களது பிள்ளைகளும் பல்வேறு மொழிகள் பேசுகின்றனர், பல்வேறு பண்பாடுகளுடன் முரண்பாடின்றி ஒத்துச் செல்கின்றனர்.

புதிய, புதிய மாதிரி கல்வியையும், தொழில் நுட்பங்களையும் கற்கின்றனர்.

(தொடரும்)

**MATH & PHYSICS TUTORING**
By a well-qualified and experienced teacher
For all grades from Grade 4 to 1st year of university
Special classes
.Advanced function
.Calculus & vectors
.Data management
All Classes available in Scarborough & Stouffville

Mr.S.F.Xavier (Teacher)
Contact: 647.340.9490 / 416.732.2228

நாம் எதற்காக இந்த உலகில் வீணாக வாழ வேண்டும் என்று எண்ணுவதை விட..
நாம் எதற்காக இந்த வாழ்க்கையை வீணடிக்க வேண்டும் என்று எண்ணிப்பார்.
நேர்மறையான எண்ணத்தோடு, நிச்சயம் உன்னுடைய வாழ்க்கை புதுப் பொலிவு பெறும்..!

# நாமும் நமது இல்லமும் 661

# ஆதன நிர்மாண நிறுவனங்களின் திவால்



ராஜா மகேந்திரன், P.Eng.
raja@mahendran.ca
416.315.9397/416.321.6969

### "Buyers Smell Blood in the Water"

ஆதனம் வாங்குவோர் ஆதன விற்பனையில் ஏற்படும் பலவீனத்தை உணர்ந்து அதனைப் பாவிக்க முற்படுகின்றனர். குறிப்பாக இந்நிலைமை வணிகம் செய்யக்கூடிய நிலங்கள், கட்டிடத் தொகுதியில் அதிகமாக ஏற்பட்டுள்ளது (Commercial properties). குடியிருப்பு ஆதனங்களில் இந்நிலைமை குறைவாகவே உள்ளது.

இதற்கு முக்கியமாக, அதிக வட்டி வீதத்தினால், இவ்வகையான ஆதனங்களை அல்லது சொத்துக்களை பராமரிப்புச் செய்வதற்கான செலவு மிகவும் அதிகமாக உள்ளது. இந்நிலைமையினால், இவ்வகையான பல சொத்துகள் சந்தைக்கு விற்பனைக்கு வருகின்றன. விற்போர்களின் நிலைமையை, தமக்குச் சாதகமாக்க ஆதனத்தை வாங்குவோர் அடிமட்ட விலையைக் (Rock bottom price) கேட்கின்றனர்.

மாதாந்தக் கொடுப்பனவு செய்யப்படாத பல சொத்துகள் இப்பொழுது அடமானக் கடன் கொடுத்த நிறுவனங்களினால் சந்தைப்படுத்தப்படுகின்றன. (Power of sale) 2024இன் முதல் ஆறு (6) மாதங்களில் $803 மில்லியன் பெறுமதியான ஆதனங்கள் இவ்வாறாக சந்தைப்படுத்தப்பட்டன.

இந்தப் பெறுமதியை 2023 முதல் ஆறு மாதங்களுடன் ஒப்பிடும்போது, ஏறக்குறைய இரண்டு மடங்காகும். இந்நிலைமை கடந்த வருடம் (2023) இறுதி மாதங்களில் இருந்து அதிகரிக்கத் தொடங்கின.

பொதுவாக வட்டிவீதம் அதிகரிப்பு அல்லது இறக்கம் ஏற்படத் தொடங்கிய காலத்திலிருந்து ஏறக்குறைய 18 மாதங்களிற்குப் (1 1/2 வருடங்களுக்கு) பிற்பாடே அதன் பாதிப்புத் தெரியவரும்.

2022 மார்ச்இலிருந்தே கனடிய மத்திய வங்கியின் வட்டி வீத அதிகரிப்புத் தொடங்கியது. ஏறக்குறைய 20 மாதங்களிலிருந்தே அதிக பாதிப்பு ஆரம்பிக்கத் தொடங்கியதனை அறியக்கூடியதாக உள்ளது.

ஜுன் 2024இலிருந்தே கனடிய மத்திய வங்கி வட்டி வீதத்தை இறங்கத் தொடங்கியது. இதனால் இதன் நேரடித் தாக்கம் (positive) அடுத்த வருடம் (2025) ஜுனிற்கு பிற்பாடே முற்றாகத் தெரியவரும். அதுவரை வணிக அதிகமான வியாபாரச் சொத்துக்கள் சந்தைக்கு விற்பனைக்கு வருவதனை எதிர்பார்க்கலாம்.



இன்று விற்போருக்கும் வாங்குவோருக்குமான விலை வித்தியாசம் மிக அதிகமாகக் காணப்படுவதனால், விற்பனை குறைந்தே வருகின்றது. விற்போர் நான்கு அல்லது ஐந்து வருடங்களுக்கு முந்தைய பெறுமதியை (விலையை) இப்பொழுதும் மனதில் வைத்திருப்பதனால், நிலைமை, வழமைக்கு வர சில காலம் எடுக்கும். ஆதனவிலை எப்பொழுதும் மாறக்கூடியதே.

இவ்வருடத்தில் (2024) முதல் ஆறு மாதங்களில் 137 ஆதன நிர்மாண திவால்கள் ஏற்பட்டுள்ளன. இந்நிலைமை தொடருமாயின் 2024 முடிவடைவதற்குள் ஏறக்குறைய 274 திவால்களை எதிர்பார்க்கலாம். (2023இல் மொத்த திவால்கள் 143 ஆகும். ஆனால், 2019 ஆம் ஆண்டில் 108ஆகக் காணப்பட்டது).

இந்நிலைமையைப் பயன்படுத்தி, பல பணம் படைத்த நிறுவனங்கள், நீண்டகால நோக்கில் மிகக்குறைந்த விலையில் வாங்குவதனையும் காணலாம். குறிப்பாக, கடந்த பத்து வருடங்களுக்குள் ஆதனம் உருவாக்குவதற்காக (developer) இந்தத் தொழிலுக்கு புதிதாக வந்தவர்களும் 2022இன் ஆரம்பத்திலும் அதிக கொள்வனவு செய்தவர்களுமே அதிகமான நெருக்கடியில் இருப்பதனை காணக்கூடியதாக உள்ளது.

2023இலும் 2024ஆம் ஆண்டின் முற்பகுதியிலும் கனடாவிற்கு அதிகமானவர்கள் குடிபெயர்ந்ததால், இவர்களின் வதிவிடத் தேவையினால், வீடு மற்றும் மனையின் வாடகைக்குரிய அதிக வருமானம் ஒரு குறிப்பிட்ட பகுதியினருக்குச் சாதகமாக இருந்து வருவதனையும் காணலாம். அதாவது, அதிக வாடகையை வசூலிப்பதனையும் காணலாம்.

தொடர்ச்சியாக வட்டிவீதம் குறைந்து வந்தால், ஏற்கனவே நெருக்கடியில் இருக்கும் உரிமையாளர்கள் ஓரளவு நிவாரணம் பெறுவர். எனினும், முதலீட்டிற்காகக் கொள்வனவு செய்தோரின் நிலைமை மாற காலம் எடுக்கலாம். குறிப்பாக 2021, 2022இன் ஆரம்பத்தில் ஆதனம் வாங்கியோரைக் குறிப்பிடலாம்.

ஆட்சியில் இருக்கும் லிபரல் அரசு புதிதாகக் கொண்டுவர இருக்கும் புதிய வரவாளர்கள் மீதான புதிய நடைமுறை, புதிய வரவாளர்களுக்கு அதிக தடையைப் போடலாம். ஓகஸ்ற் 29, 2024இலிருந்து கனடாவிற்கு சுற்றுலா விசாவில் வந்தவர்கள், தொழில் புரிவதற்குரிய பத்திரம் பெறுவது நிறுத்தப்பட்டுள்ளது. புதிய வரவாளர்கள் மீதான பல திட்டங்களை கனடிய அரசு நடைமுறைப்படுத்த உள்ளது. இதனால், கனடியர்களுக்கு தொழில்புரியக்கூடிய வசதிகள் அதிகமாக ஏற்படலாம்.

இதனால் வாடகைக்குக் கொடுப்பதில் நெகிழ்வுத் தன்மை ஏற்படும். எனினும், இன்று தொழில் கிடைக்காமல் அல்லல் படுவோர்களுக்கு சிறிய நிவாரணம் ஏற்படலாம். புதிய நடைமுறையை அறிய சில காலம் எடுக்கும்.

### Toronto New Home Sales Record Low

* ரொறொன்ரோ புதிய ஆதன வியாபாரம் ஜுலை 24இல் 10 வருட சராசரி வியாபாரத்துடன் ஒப்பிடும்போது 70% குறைவாக இருந்தது.

* அடுக்குமனை வியாபாரம் 10 வருட சராசரியுடன் ஒப்பிடும்போது 81% குறைவாகவும், ஜுலை 2023உடன் ஒப்பிடும்போது 67% குறைவாகவும் காணப்படுகின்றது.

## இரண்டாம்.....

04ஆம் பக்கத்தொடர்ச்சி

பொதுவாக ஆட்சி மாற்றங்கள் என்பது எல்லாச் சந்தர்ப்பங்களிலும் சுமூகமானதாக இருந்ததில்லை.

அமெரிக்காவில்கூட அந்த நிலைதான் காணப்படுகிறது. கடந்த 2020ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் டொனால்ட் ட்ரம்ப் தோல்வியடைந்த பின்னர் குழப்பங்களைத் தூண்டிவிட்டிருந்தார்.

அதிகாரத்தைச் சுமுகமாகக் கை மாற்றுவதற்கு அவருடன் மல்லுக்கட்ட வேண்டியிருந்தது. இந்த முறைகூட அவ்வாறான நிலை ஏற்படாது என்ற நிச்சயம் இல்லை. 2015 ஜனாதிபதித் தேர்தலில் மைத்திரிபால சிறிசேனாவின் வெற்றி உறுதிப்படுத்தப் பட்ட நிலையில், ஜனாதிபதியாக இருந்த மஹிந்த ராஜபக்ச நள்ளிரவு அலரி மாளிகைக்கு கோட்டாபய ராஜபக்ஷ வையும் முப்படைகளின் தளபதிகளையும், அழைத்து ஆட்சியில் நீடிப்பதற்கான சதித்திட்டம் ஒன்றை தீட்டினார்.

அமெரிக்க இராஜாங்கச் செயலராக இருந்த ஜோன் கெரி, அதனைத் தடுத்து, மஹிந்த ராஜபக்ச பதவி விலகிச் செல்லும் நிலையை ஏற்படுத்தினார்.

அண்மையில் வெனிசுவேலாவில் நடந்த ஜனாதிபதித் தேர்தலில் எதிர்க்கட்சி வேட்பாளர் வெற்றி பெற்றதாக கூறப்பட்ட போதும் ஆட்சியில் உள்ள ஜனாதிபதி நிகோலஸ் மதுரே, அதனை மறுத்து, தானே வெற்றியாளர் என அறிவித்திருக்கிறார்.

உலகின் பல நாடுகளில் தேர்தல் முடிவுகளை ஏற்றுக்கொள்ளாத சூழல்கள் நிலவி இருக்கின்றன. அவ்வாறான சந்தர்ப்பங் களில் குழப்பங்கள், கலவரங்கள் ஏற்படுவது இயல்பு.




இலங்கையின் ஜனாதிபதித் தேர்தலில் குழப்பங்கள் ஏற்பட்டாலோ, இரண்டாவது சுற்று வாக்கு எண்ணிக்கைக்குச் செல்லும் நிலை ஏற்பட்டாலோ - அது இன்னொரு ‘அரகலய’வுக்கு (உள்நாட்டுக் குழப்பங்களுக்கு) வழிவகுத்து விடக்கூடும்.

இவ்வாறான நிலையில், இந்த ஜனாதிபதித் தேர்தல் அமைதியாக இடம்பெறத் தவறினால், மக்கள், மோசமானதொரு நிலைக்குத் தள்ளப்படும் நிலை ஏற்படலாம்.


சந்திரமௌலீஸ்வர சிவாலயம்
தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்
ஆலயம் திறந்திருக்கும் நேரம்
வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில்: காலை 7am - மாலை 9pm
திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm மாலை 5pm - 9pm
விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம். ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்
Tel: 416.754.7338 / 416.724.7480
3011 Markham Road, Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarborough

# தமிழ்த் தாத்தா – உ.வே.சாவா ஆறுமுக நாவலரா?

**கண்ணன்**

தமிழ்த் தாத்தா என்று உ.வே. சாமிநாத அய்யர் அழைக்கப்பட்டு, அது பரவலாக ஏற்றுக்கொள்ளவும்பட்டுள்ளது. இந்நிலையில், சமூக வலைதளங்களில் உ.வே.சா தமிழ்த் தாத்தா அல்ல, ஆறுமுக நாவலர்தான் தமிழ்த் தாத்தா என்ற விமர்சனத்தை சிலர் எழுப்பியுள்ளனர். உண்மையில் யார்தான் தமிழ்த் தாத்தா என அழைக்கப்படத் தகுதியானவர்?

இதற்கான விடையைத் தேடும்முன், உவேசா தமிழ்த் தாத்தா ஆனது எப்படி எனப் பார்ப்போம்;

பழங்காலத்தில் தமிழ் இலக்கியங்கள் அனைத்தும் ஏட்டுச் சுவடிகளிலேயே இருந்தன. அச்சுஇயந்திரம் கண்டுபிடிக்கப்பட்டு ஏட்டில் இருந்த இலக்கியங்கள் அச்சுவடிவம் பெற்றது, தமிழ் இலக்கிய வரலாற்றின் திருப்புமையமானது. மூவாயிரம் ஆண்டு பழமை வாய்ந்த மொழி என்று இன்று நாம் பெருமையாகத் தமிழைச் சொல்லக் காரணமான சங்க கால நூல்கள் முதலில் ஓலைச் சுவடிகளாகத்தான் இருந்தன. அவை அழிந்து போயிருந்தால், தமிழ் மூவாயிரம் ஆண்டு பழமையானது என்று கூறுவதற்கான ஆதாரத்தை நாம் தொலைத்திருப்போம் என்பது குறிப்பிடத்தக்கது.

ஏட்டிலிருந்து அச்சுப் பதிப்பது அப்படி ஒன்றும் எளிய செயல் இல்லை. ஏட்டில் உள்ளவற்றைப் புரிந்துகொண்டு எந்தப் பிழையும் இல்லாமல் அச்சில் பதிக்கும் அரிய பணியை மேற்கொண்ட பெரியவர்களாலேயே இன்றைக்குத் தமிழ் இலக்கணங்களும் இலக்கியங்களும் நமக்குக் கிடைத்துள்ளன. இத்தகைய அரிய பணியைச் செய்தோரில் ஒருவர் உவேசா.

ஓலைச்சுவடிகளின் காலகட்டம் முடியும் தறுவாயில் அழிந்துகொண்டிருந்த சங்க கால நூல்களை, பல்வேறு ஊர்களுக்கும் அலைந்து தேடித்தேடிக் கண்டறிந்து பதிப்பித்தவர் உ.வே. சாமிநாத அய்யர்.

அக்காலத்தில் ஆங்கிலம், சமஸ்கிருதத்தைத் தூக்கிப் பிடிப்போரிடம், “இந்த இரண்டு மொழிகளும் கும்பிடு போட்டுக் காலில் விழும் அளவுக்குத் தொன்மை வாய்ந்த சிறப்பு மொழி தமிழ்” என்பாராம் உ.வே.சா. ஆங்கிலம், சமஸ்கிருதத்தை விட தமிழ் ஏன் பெருமையானது எனக் காட்டத்தான் சங்க இலக்கிய நூல்களைத் தேடிப்பிடித்து புதுப்பிக்க முடிவு செய்தார்.

அப்படித்தான் சீவகசிந்தாமணி, சிலப்பதிகாரம், பத்துப்பாட்டு, புறநானூறு, மதுரைக் காஞ்சி, பொருநராற்றுப்படை, குறிஞ்சிப் பாட்டு, பட்டினப்பாலை, மலைபடுகடாம் (கூத்தராற்றுப்படை) போன்ற சங்ககால இலக்கிய நூல்கள் உட்பட நூற்றுக்கும் அதிகமான நூல்களைக் கண்டறிந்து அதைப் பதிப்பித்து இன்றைய தலைமுறைக்கு அறிமுகப்படுத்தினார். இந்த நூல்களைப் பதிப்பித்ததுடன் பல நூல்களுக்கு உரையும் எழுதியுள்ளார்



உவேசா. இன்றளவும் சங்க இலக்கிய நூல்களுக்கான சிறந்த உரை நூலாக உ.வே.சா எழுதிய மணிமேகலை உரையையே குறிப்பிடுகின்றனர் தமிழறிஞர்கள். உ.வே.சா.வின் தமிழ்ப் பணியைப் பாராட்டி மார்ச் 21, 1931ஆம் திகதி ‘மகாமகோ பத்தியார்’ என்ற பட்டம் வழங்கிக் கௌரவித்தது சென்னை பல்கலைக்கழகம். அன்று சங்ககாலத் தமிழும், பிற்காலத் தமிழும் என்ற தலைப்பில் சென்னை பல்கலைக்கழகத்தில் அவர் பேசிய பேச்சு பின்னர் நூலாக வெளிவந்தது. அந்த அளவுக்குப் பேச்சுக்கலையில் சிறந்தவர், பேசுவதை நகைச்சுவை இழையோட பேசுவார்.

1940 ஏப்ரல் 28ஆம் திகதி தனது 87வது வயதில் உவேசா மறைந்தார். தமிழ்நாட்டில் உத்தமநாதபுரத்தில் உ.வே.சா பிறந்த இல்லம் தமிழ்நாடு அரசால் நினைவில்லமாக மாற்றப்பட்டது. 1942இல் சென்னையில் அவர் பெயரில் அமைக்கப்பட்ட நூல் நிலையம் இன்றளவும் செயல்படுகிறது.

### சரி, ஆறுமுகநாவலர் என்ன செய்துள்ளார்? அவரைத் தமிழ்த் தாத்தா என்று ஏன் சொல்ல வேண்டும் என்கின்றனர்?

தமிழ்த் தாத்தா என்றால் உவேசாபோல் நாவலர் என்றால் ஆறுமுகநாவலர்தான். அக்காலத்தில் ஏட்டில் இருந்த தமிழ் இலக்கியங்களைப் புரிந்து பிழை இல்லாமல் அச்சில் பதிக்கும் அரிய பணியை மேற்கொண்ட முன்னோடிகளுள் முதன்மையானவர் ஆறுமுகநாவலர். ஆம், உவேசாவுக்கும் முந்தையவர் மூத்தவர்.

இலங்கையில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஆறுமுகநாவலரின் இயற்பெயர் ஆறுமுகம் மட்டும்தான். எந்த இலக்கியத்தைப் பற்றியும் மடை திறந்த வெள்ளம்போல் கருத்துகளைப் பொழிந்துதள்ளும் சொல்லாற்றல் கொண்டவர் என்பதால் இவரது சொல்லாற்றலைப் பாராட்டித் திருவாவடுதுறை ஆதீனம் இவருக்கு ‘நாவலர்’ என்னும் பட்டத்தை வழங்கியது. அதன்பின் இவர் ஆறுமுக நாவலர் என்றே அழைக்கப்பட்டார்.

இலங்கையில் தமிழையும் ஆங்கிலத்தையும் கற்பிக்கும் ஆசிரியராகப் பணிபுரிந்தார். இந்நிலையில், இவருடைய தமிழறிவையும் ஆங்கிலப் புலமையையும் கண்டு மகிழ்ந்த கல்லூரி அதிபர் பெர்சிவல் பாதிரியார் பைபிளைத் தமிழில் மொழிபெயர்க்கும் தமது பணிக்குத் துணையாகத் தமிழ் நாட்டுக்கு அழைத்து வந்தார். தமிழும் சைவமும் தமது இரு கண்களாகப் போற்றிய ஆறுமுகநாவலர் தமிழில் பைபிள் மொழிபெயர்ப்புப் பணியாற்றியது அவருடைய பொதுநோக்கிற்கும் பெருந்தன்மைக்கும் எடுத்துக்காட்டு.

இந்நிலையில், ஏட்டுச்சுவடிகளைக் கண்டறிந்து நூல்களைப் பதிப்பிக்கும் பணியில் முனைந்து பாடுபட்டார். இதற்காகச் சொந்தமாக அச்சு இயந்திரம் வாங்கி வித்தியானுபாலனயந்திரசாலை என்னும் பெயரில் அச்சுக்கூடம் நடத்தினார். திருமணமும் செய்து கொள்ளாமல் பதிப்புப் பணியும் சைவசமயத்தைப் பரப்பும் பணியுமே தமது குறிக்கோள்களாகக் கொண்டு செயல்பட்டார்.

இலக்கணம், சமயநூல்கள், காப்பியங்கள் எனப் பலவகையாக 44 நூல்களைப் பதிப்பித்துள்ளார் ஆறுமுகநாவலர். இலக்கணம் தொடர்பாகவும் சைவசமயத்திற்கு விளக்கமாகவும் 24 நூல்கள் எழுதியுள்ளார். 16 நூல்களுக்கு உரை எழுதியுள்ளார். இவர் உரை எழுதிய நூல்களுள் ஆத்திசூடி, கொன்றைவேந்தன், நல்வழி முதலான சிறுவர் இலக்கியமும் அடங்கும். பெரிய புராணம், திருவிளையாடற்புராணம், திருமுருகாற்றுப்படை முதலான இலக்கியங்களுக்கு இவருடைய உரை எளிமையாக மக்கள் புரிந்துகொள்ள வழிவகுத்தது. எனவே, இவரை ‘தமிழ் உரைநடையின் தந்தை’ என்று மு. வரதராசனார் போற்றியுள்ளார்.

சரி, ஆறுமுக நாவலர் ‘தமிழின் தந்தை’ என்றால், அவருக்குப் பிறகு வந்த உவேசா ‘தமிழ்த் தாத்தா’ ஆனது எப்படி? இது தொடர்பாக தமிழக வரலாற்று ஆய்வாளர் பொ. வேல்சாமி, “1860இல் உ.வே. சாவுக்கு 6 வயது இருக்கும்போது. சைவ வேளாளரான ஆறுமுகநாவலருக்கு ‘தமிழ்த் தாத்தா’ ஆகும் அற்புதமான வாய்ப்புக் கிடைத்தது. 1860இல் மதுரைத் தமிழ்ச் சங்கத்தைத் தோற்றுவித்த பாண்டித்துரைத் தேவருடைய தந்தையார் பொன்னுசாமி தேவரின் ஆதரவில் ஆறுமுகநாவலர் வெளியிட்ட ‘திருக்கோவையார்’ என்ற நூலில் ஓர் ஆச்சரியமான விளம்பரம் வெளியாகி உள்ளது. அந்த விளம்பரத்தில் ஆறுமுகநாவலர் தொல்காப்பிய உரைகள், சீவகசிந்தாமணி, மணிமேகலை, புறநானூறு, புறப்பொருள்



வெண்பாமாலை, இன்று தமிழ்ச் சமூகம் இழந்துவிட்ட அரியநூலாகிய வளையாபதி உட்பட, பதிற்றுப்பத்து, ஐங்குறுநூறு, பரிபாடல் போன்ற சங்க நூல்களை வெளியிடப்போவதாகக் குறிப்பிடப்பிட்டு இருந்தார். அந்தக் காலக்கட்டத்தில் சங்க காலத்து நூல்களான இவற்றைப்பற்றி பெரும்பாலானோருக்குத் தெரியாது என்பது குறிப்பிடத்தக்கது.

உ.வே.சாவுக்கு ஆறு வயதாகும்போது ஆறுமுகநாவலரால் விளம்பரம் செய்யப்பட்ட அந்த நூல்களை அவர் வெளியிட்டு இருந்தால் இன்று அவர்தான் ‘தமிழ்த் தாத்தா’ என்று அழைக்கப்பட்டிருப்பார். ஆனால், ‘இலக்கணக் கொத்து’ என்ற நூலை எழுதிய சுவாமி தேசிகர் சங்க இலக்கியங்களைத் தரமான தமிழ் நூல்களாகக் கருதாமல் சைவ நூல்களை மட்டும் தரமான தமிழ் நூல்களாகக் கருதியதைப் போன்று, ஆறுமுகநாவலரும் அவரைச் சார்ந்தோர்களும் அந்தக் காலத்தில் கருத்துகளைக் கொண்டிருந்ததால் ‘மதம்’ சாராத இந்த சங்க நூல்களை வெளியிடப் போவதாக அறிவித்தும் வெளியிடாமல் புறக்கணித்து விட்டனர்.

இதேபோன்ற ஒரு புறக்கணிப்பு மனோபாவத்தைச் சைவத்தை முதன்மையாகக் கருதும் திருவாவடுதுறை ஆதீனத்தால் உருவாக்கப்பட்ட மாணவரான உ.வே. சாமிநாத அய்யரும் கொண்டிருந்து சங்க இலக்கியங்களை வெளியிடாமல் இருந்திருந்தால், சங்க இலக்கியங்களைப்பற்றியும் அதனால் அறியப்பட்ட தமிழின் வரலாறு சமஸ்கிருதத்திற்கு ஈடானது என்றும் அதற்கும் மேலானதும் என்றும்

தொடர்ச்சி 18ஆம் பக்கம்

யோக சோதிடம்
கிரகப்பொருத்தம் பார்த்தல் சுபமுகூர்த்தம் கணித்தல்
சாதகக் குறிப்புக் கணித்தல் பலன் பார்த்தல்
தொடர்புகளுக்கு: 416.299.8361

# நானிலம் போற்றும் நட்பு - 51



- அகணி -
authorakani@gmail.com

இதுவரை திருக்குறளில் உள்ள நட்பு பற்றிய கருத்துக்களுடன் கட்டுரையைத் தொடங்கியிருந்தோம்.

இன்று திரிகடுகம் நூலில் உள்ள பதினெட்டாம் செய்யுளுடன் கட்டுரையைத் தொடங்குவோம்.

“ஒருதலையான் வந்துறூஉம் மூப்பும், புணர்ந்தார்க்கு
இரு தலையும் இன்னாப் பிரிவும், உருவினை
உள் உருக்கித் தின்னும் பெரும் பிணியும், இம் மூன்றும்
கள்வரின் அஞ்சப்படும்.”

‘இரு தலையும்’ என்றால் ‘இரண்டிடத்தும்’ என்றும் ‘உரு’ என்றால் ‘உடம்பு’ என்றும் பொருள் கொள்ளுமாறு உரையாசிரியர்கள் விளக்கம் தந்துள்ளனர்.

இந்தச் செய்யுளிற்கான பொருள் “உறுதியாக வரும் மூப்பு, நண்பரின் பிரிவு, உடம்பினை உருக்குகின்ற தீராத நோய், இம்மூன்றுக்கும் அஞ்சி எச்சரிக்கையுடன் இருத்தல் வேண்டும்.” என்று உரையாசிரியர்கள் விளக்கம் கொடுத்துள்ளனர்.

மனிதர் மூப்படைதல் என்பது தவிர்க்க முடியாதது. இதனால் வரும் பாதிப்புக்களுக்கு முகம் கொடுப்பதற்குத் தயாராகவும், எச்சரிக்கையாகவும் இருக்க வேண்டும் என்று புலவர் அறிவுரை கூறுகின்றார். நண்பரின் பிரிவு வருத்தம் தருவது என்பதை உணர்ந்து எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும். உடம்பினை வருத்தும் தீராத நோய்கள் அணுகாமல் இருக்குமாறு எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும் என்று புலவர் அறிவுரை கூறுகின்றார். ஆனால் எவ்வளவு கவனமாக இருந்தாலும் தீராத நோய்கள் வந்து பலர் வாழ்க்கையில் அல்லலபடவேண்டி வந்து விடுகின்றது. சீரான உணவு, உடற்பயிற்சி, பழக்க வழக்கங்கள் உடல் நலத்துக்கு முக்கியமானவை என்பதால் இவற்றில் கவனம் செலுத்துவது நல்லது. புலவரால் இந்தச் செய்யுளில் நட்பு பற்றியும், ஏனைய விடயங்கள் பற்றியும் குறிக்கப்பட்ட அறிவுரைகள் மிகவும் பயனுள்ள அறிவுரைகளாக உள்ளன.

இப்பொழுது குறுந்தொகையில் வரும் நூற்றி எட்டாவது பாடலைக் கவனிப்போம்.
இது வாயிலான் தேவன் என்னும் புலவர் பாடிய பாட்டு. கார் காலத்தைக் கண்ட தலைவி, “தலைவன் இன்னும் வரவில்லை. இனி என்னால் உயிர் வாழமுடியாது” என்று தன் தோழியிடம் கூறியது. இது முல்லைத்திணை சார்ந்தது.

ஒரு தலைமகள் அவளுடைய கணவன் வேறு வேலையாக வெளியிலே போயிருக்கின்றான். மாலைக் காலத்திலே வந்து விடுகிறேன் என்று சொல்லிவிட்டுப் போனான். தலைவியும் அவனுடைய வரவை எதிர்பார்த்து நின்றாள். காதலன் வருகின்றானா, வருகின்றானா என்று தெருவாசலை எட்டி எட்டிப் பார்த்துக் கொண்டிருந்தாள். அவனைக் காணவில்லை.

அது மாலைக்காலம் கார்காலமுங்கூட காதலனைக் காணாமல் அவள் துன்புற்றாள். துன்பம் அடைகின்றவர் தன் துன்பத்தைத் தன்பால் அன்புள்ளவர்களிடம் சொல்லிக் கொண்டால் சிறிது ஆறுதல் அடைவர். இது இயற்கை.

ஆதலால் அத்தலைவி அந்தக் கார்காலத்து மாலையிலே நடக்கும் இயற்கை நிகழ்ச்சியை எடுத்துத் தன் தோழியிடம் கூறினாள். அதன்மூலம் தன் மனத்தில் உள்ள வேதனையைச் சிறிது மாற்றிக் கொண்டாள்.

“மழை விளையாடும் குன்றுசேர் சிறுகுடிக்
கறவை கன்றுவயின் படரப் புறவில்
பாசிலை முல்லை ஆசில் வான்பூச்
செவ்வான் செவ்வி கொண்டன்று
உய்யேன் போல்வல் தோழி யானே.”

இந்தப் பாட்டின் பொருளினைக் கவனிப்போம்.
“மேகங்கள் கூடி விளையாடிக் கொண்டிருக்கின்ற, குன்றின் பக்கத்திலே உள்ள இந்தச் சிற்றூரிலிருந்து, வெளியே மேய்வதற்குப் போயிருந்த பசுக்கள் தம் கன்றுகள் இருக்கும் இடத்தை நோக்கித் திரும்பவும், காட்டில், பசுமையான இலைகளையுடைய முல்லைக் கொடிகளின், ஆசு இல் குற்றமில்லாத வெண்மையான மலர்கள், செவ்வானத்திலே உள்ள நட்சத்திரங்களின், அழகையும் கொண்டிருக்கின்றன. இக்காலத்திலும் அவர் திரும்பவில்லை ஆதலால் நான் இனி உயிர் வாழ மாட்டேன்.”

